628

பதிவு எண — M.5720 வெள்ளிக் கிழமை குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்ருண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனர்.

கிளை–4 தருதலம், மாம்பாக்கம் ; கர, தை ; 1—2—52. தளிர்–18

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## நெடுங்கடல் நீர்மை

உலகில் பெரும்பகுதி கடல்நீராகக் காட்சி யளிக்கின்றது. கடலின் ஆழம் அகற்சி முதலானவற்றை அளந்து இத்துணையவென்று துணிந்தறிந்து கூறினர் எவரும் இல்லை. கடல் நீர் ஞாயிற்றின் வெப்பத்தால் முகிலாகி விசும்பிற் சென்று குளிர்காற்றுத் தலைப்பட்ட நிலையில் மழையாகப் பொழிந்து உலகினைப் புரந்தூட்டுகின்றது.

அங்ஙனம் மழைக்குக் கடலே முதற்காரணமாக அமைந்து நிற்பினும், மழை நீர் தன்கண் பெய்யாதொழியின் அக் கடல் நீரும் தன் இயல்பில் மாறுபடும்.

சிறிய நீர்நிலைகளிலும் தேங்கியநீர் குறைந்து ஊற்று நீரோ, மழை நீரோ, அக் குறையை நிறைவு செய்யாதொழியின் அவை, தம் தகுதியில் மாறுபட்டு ஒன்றுக்கும் உதவாதொழிதல் காண்கிறோம். அஃதேபோல் பெரிய நீர் நிலையாகிய கடல் நீரினையும் மேகம் குறையுமாறு செய்த பின்னும் அக் கடலிலே மழையாகப் பெய்யாது நீங்குமாளுல் அது மிகவும் தன் இயல்பில் மாறுபடும் என்பது பெற்ரும்.

கடலில் பல கோடி உயிர்கள் வாழ்கின்றன. முத்து பவழம் முதலிய கடல்படு பொருள்களும் உண்டாகின்றன. முத்துச் சிப்பிகளில் முத்துக்கள் மழை நீர்த் துளிகளின் உதவி கொண்டே உண்டாவதாகக் கூறுகிருர்கள். மழை நீர் கடற்கண் பெய்யா தொழியின் இவை உண்டாகா தொழியும். மேலும், இடையீடின்றித் தேங்கிய கடல் நீர் தீ நாற்றம் வீசி உலகத்தையே அழித்து விடும்.

ஆகவே, மழை நிலவுலகத்தைப் புரந்தூட்டுமாறு போலக் கடலுலகத்தையும் தானுக அருள்கூர்ந்து புரக்கின்றது என்பதனை இக்குறள் அறிவிக்கின்றது.

நெடுங்கடலும் தன்நீர்மை
குன்றும் தடிந்(து) எழிலி
தான் நல்கா தாகி விடின்

நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும்—பெரிய கடலும் தன் இயல்பு குறையும்; எழிலி தான் தடிந்து நல்காது ஆகிவிடின்—மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கண் பெய்யாது விடுமாயின்.

'நெடுங்கடலும்' என்பதில் உள்ள உம்மை உயர்வு சிறப்பு உம்மையாகும். 'குறைத்தல்' என்றது நீர் முகத்தலை. 'கடல் குறைபடுத்த நீர் கல்குறை பட எறிந்து' என்னும் பரிபாடல் அடியில் இக் கருத்து வருகின்றது. நிலத்தினும் கடல் பெரிதாகவின் 'நெடுங்கடல்' என்ருர். எழில், மேலெழுந்து செல்லும் இயல்புடையது என்னும் பொருளில் மேகத்துக் காயிற்று. நல்குதல், அருளோடும் கொடுத்தல். மேகம் கைம்மாறு கருதாமலும் உயர்வு தாழ்வு நோக்காமலும் எல்லா இடத்தினும் ஒரு சமமாகப் பெய்யும் தன்மை உடையதாகலின் நல்குதல் அதற்கு இயல்பாயிற்று. தடிந்து என்பதற்கு மின்னி என்றும் பொருள் கூறலாம்.

மழைக்கு முதலாகிய கடலுக்கும் மழை இன்றியமையாத சிறப்பினை இச் செய்யுள் விளக்குகின்றது.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.



| கிளை | கர, தை, | தளிர் |
|---|---|---|
| 4 | 1-2-52 வெள்ளி | 18 |



# பொருள் நிலை

ஒவ்வொரு நாடும், பொருளும் இன்பமும் அறமும் விடுதலையும் பெற்றிருக்கவேண்டும். இவற்றில் எது குறைந்திருந்தாலும் மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கு எந்த நாடும் ஏற்றதாகாது.

தக்க அரசியலமைவு இவ்வெற்றிக்கு இடந்தரும். அரசியல் தக்கதாக அமைவதற்குச் சான்றோர் துணை வேண்டும்.

இங்ஙனம் சான்றோர் துணையால் மட்டுமே ஒவ்வொரு நாடும் பெறுவன பெறுதல் வேண்டுமன்றி வேறு வழியே இல்லை. இது உயர்ந்தோர் முடிபு! "தக்கார் இனத்தனாய்த் தான் ஒழுக வல்லானைச் செற்றார் செயக்கிடந்தது இல்" "பல்லார் பகை கொளலின் பத்தடுத்த தீமைத்தே நல்லார் தொடர் கைவிடல்" என்னும் தெய்வப் பெருமொழிகளை யாரும் மறத்தலாகாது!

பொருள் அறம் இன்பம் விடுதலை என்னும் நான்கு நலங்களில், விடுதலை என்பது மற்ற மூன்றுக்கும் முதன்மையாகவும் பயனாகவும் உள்ளது. விடுதலை என்பது உரிமை; நாடு உரிமை பெறாதபோது, பொருளாதார உரிமை முதலியனவும் கிட்டுவதில்லை.

உலகம் பலவேறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பிரிப்புக்குரிய காரணம் இயற்கையோடு பொருந்தியிருந்தால், எல்லைக்கோடு அடிக்கடி மாறுபடாததாய் நிலைக்கும்; இயற்கை என்பது கடல், மலை, ஆறு போன்றனவும் மொழியும்! கடல் மலை ஆறு போன்றவை பருமையாயுள்ளவை; மொழி, நுண்பொருள். ஆதலால், மொழி வழியாக உலக நாடுகள் பிரிப்புண்டு நிற்பது, இயற்கை ஆற்றலோடு மிகவும் பொருந்தியிருக்கும்.

தமிழ் நாடு ஒரு காலத்தில் தென்குமரி ஆறும், வட இமய மலையும் கீழ் மேற் கடல்களும் நாற்றிசை எல்லைகளாய்த் தமிழ் மொழி அரசாய்த் திகழ்ந்தோங்கி, இயற்கை ஆற்றலாய்ப் பல்லாயிர ஆண்டுகள் அறமும் பொருளும் இன்பமும் விடுதலையும் பெற்றிருந்தது! அந்தக் காலத்தில் உலகின் எந்தப் பாகமும் இவ்வளவு சிறந்த இயற்கைகள் அமைந்த நாடாகவும் உயர்ந்த நாகரிக நாடாகவும் விளங்கியிருக்கவில்லை. தமிழர் உரிமைக்கும் ஆற்றலுக்கும் அடையாளம் இது! யாரையும் வலுவில் அடக்கிப் பெற்ற செல்வமன்று இது; இபற்கை தந்த நன்கொடையை ஆற்றலுடன் அறநெறி வீற்றுடன் ஆண்டு கொண்ட செல்வம்! மீண்டும் அச் செல்வத்தைப் பெறுவதாயின், தமிழர் உண்மையில் விடுதலை பெற்றவரே!.

உலக நாடுகள் இங்ஙனம் கடல் மலை ஆறுகளாலும் மொழி வழியாகவும் இயற்கை வரம்புகளுடன் பிரிப்புண்டு விளங்கினால், அவை ஒற்றுமையும் ஆற்றலும் மிக்கு, உட்பகையின்றிச் செழிக்கும்.

இயற்கை வரம்புக்கும் ஆற்றலுக்கும் மொழியைவிடச் சிறந்தது வேறில்லை; சாதி சமயம் நிறம் முதலியன மொழியாற்றலுக்கு முன் நிற்பன அல்ல; காரணம், மொழிதான் செயலுக்கு உதவுவது; அவையெல்லாம் செயலுக்கு உதவா. கடல் மலை ஆறுகளாகிய பிற இயற்கைகள் அமையாவிட்டாலும் மொழியியற்கையில் நாடுகள் வரம்பு கொள்வது, ஆற்றலும் ஆக்கமும் மிகுதற்குரியது! ஆதலால், கூட்டு நாடுகளாயிருப்பவை, மொழி வழி மாகாணங்களாய்ப் பாகுபாடு கொண்டு செயலாற்றுதலே ஏற்றது; இயற்கைத் தகுதியும் ஆற்றலும் வாய்ந்தது. அமைதிக்கும் உரிமைக்கும் பொருள் முதலிய முயற்சிகட்கும் பொருந்தியது. இம் மொழி வழிப் பிரிவினையைத் தற்கால நிலைகளை ஒட்டிப் பிரிக்காமல், பண்டை வரலாற்றடிப்படையிற் பிரித்தலே இயற்கையின் ஆற்றலமைந்தது! அதுவும், வரலாற்றுக் காலத் தொடக்கத்தில் எப்படி அமைந்திருந்ததோ அவ்வாறு அமைவது பெருஞ் சிறப்பு!

கூட்டு நாடுகள் இங்ஙனம் மொழி வழி மாகாணங்களாய்ப் பாகுபாடு கொண்டு செயலாற்றுவது உலக அமைதிக்கு முதற்படியாகும்!

அதன் பின், அவரவர் எல்லையில் அவரவரும், நிலைபெற்று வாழும் வகைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்; பிறர்க்குரிய நடுகளிற் சென்று நிலைபெறக் கருதலாகாது; அப்படிச் சென்று நிலைபெறுவார்க்கு எந்த நாட்டாரும் இடந்தருதலும் முறையன்று. ஒருவருக்கொருவர் நன்மை செய்யுங் கருத்தில் தற்காலிகமாக, யாரும் எங்கும் வந்து போதல் பெரிதும் வரவேற்கத் தக்கது; அதனால் நலம் வளரும்! இந் நிலை, அமைதிக்கு இரண்டாம் படியாகும்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# இசையின் பெருமையும் * * இசைஞர் கடமையும்

தி. நாகப்பன்,

உழைப்பால் தெய்வநிலை எய்தியவர் சிலர்; அவர் சான்றோர் எனப்படுவர். அச் சான்றோர் வாயிலாக இயற்கை அன்னை தன் கலைகளை விரித்தனள்-

கலைகள் பல பிறந்தன. அவைகளுள் விழுமியது இசைக் கலை; இக்கலை எல்லாக்கலைகளிலும் கலந்தும் தனித்தும் இயங்கும் பெருமை வாய்ந்தது. இதனால் இது விழுமியதாகிறது. மேலும், இசைக்கலை இயங்குமிடத்தில் பிறகலைகளின் மணமும் பொருந்தி வீசும் பெற்றியுடையது. ஆதலின், இத்தகைய இசைக்கலையை மற்றக் கலைகளின் உயிர்நாடி என்று கூறுவது தவறாகாது.

இசை நுண்மை உயிர்; இதன் விளக்கத்திற்கு ஒரு பருமை உடல் தேவையல்லவா? அப் பருமை உடலே மொழி என்பது.

தமிழ் இசை தொன்மை வாய்ந்தது; அவ்விசை எந்நாளில் தோன்றியது வளர்ந்தது என்று அறுதியிட்டுக் கூற இயலவில்லை. அது சரித்திரக் காலத்தையும் கடந்து நிற்பது. பல நாட்டவர் இசை நுட்பம் இன்னதென்று தெரியாது திரிந்த காலத்தில் தமிழ் நாட்டவரே இசை நுட்பத்தைச் செவ்வனே தெளிந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் பலப்பல உள்ளன. தமிழர் கோயிலகளும், மறைகளும், காவியங்களும்—என்? ஓவியங்களும் கூட எடுத்துக் காட்டுகளாக இலங்குகின்றன. தமிழ் நாடே ஓர் இசை நிலையம் என்று சுருங்கக் கூறலாம்.

பிற்காலத் தமிழ் நாடு பல கலைகளை இழந்தது. இசைக் கலைகளில் பல கூறுகளை இழந்தது. பொல்லா விலங்குகளையும் வயப்படுத்தவல்ல யாழை இழந்தது. இது பிற்காலத் தமிழ் மக்களின் கவலை ஈனத்தால் விளைந்தது.

மனிதன்பால் அமைந்துள்ள குரங்கியல்பை நீக்கி இறை இயல்பை அரும்பச் செய்யும் ஆற்றல் கலைகளின் உயிர் நாடியாகிய இசைக்கு உண்டு என்று அறுதியிட்டுக் கூறலாம். மேலும், இவ் உண்மையைச் சென்ற சில ஆண்டுகட்கு முன்பு பிரஞ்சு தேசத்தவர்கள் ஓர் மாநாடு கூட்டி இயல்பாய் மனத்திற்கு இன்பமும், ஒருமையும் தரக் கூடியது எதுவென்று ஆய்ந்து, இசை ஒன்றேயாகும் என்று முடிவு செய்தனர். இதற்குக் கண்ணன் குழலிசையும், ஆயர் குழலிசையும், பாணர் யாழ்இசையும் சான்று பகரும்.

பல்வேறு தத்துவ உலகங்களெலாம் தோன்றுதற்கும், மீண்டும் அவை ஒடுங்குதற்கும் நிலைக் களமாய் இருப்பது நாதம். நாதத்துக்கு மேல் விளங்குவது வாலறிவாகிய பரம். அப் பரத்தின் வழியே நாதம் இயங்குகின்றது. நாதம் பரத்துக்கு அணித்தே திகழ்வதால் அதை நாதப் பிரம்மமென்று சான்றோர் அருளிச் சென்றனர்.

தமிழ்நாட்டில் சிறந்த கலைகளை வளர்ப்பதற் கென்று காணப் பெற்ற நிலையங்கள் பல. அவைகளுள் சிறந்தது கோயில். கோயில் வெறும் கட்டடமன்று; அது பல்கலைக் கூடம்; இசை நிலையம் ஆகும்.

இப்பொழுது கோயில் எப்படி பெரிதும் கொள்ளப் படுகிறது? மக்கள் மனநிலை மாறி, கலைக் கண்ணும், இசைச் செவியும் வேறுபட்டுள்ளன. கண்ணையும், செவியையும் மாற்றி உண்மைக் கலையின் உயர்வைத் தெரிந்து கொள்ளச், சான்றோர்கள் காட்டிய நெறியை நன்கு உணர்ந்து அவர்கள் பாடலின் பெருமையினை ஓம்பி இசையோடு பாடிப் பரவிப் போற்ற வேண்டும்.

தமிழ் என்பது இனிமை; இசை என்றாலும் இனிமை. இவ் விரண்டு இனிமையும் கலந்து ஒன்றுபட்டுச் சுரக்கும் இன்ப நிலையிலிருந்து மலர்ந்த தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம், திருப்புகழ் போன்ற சான்றோர்களின் மறைகள் அனைத்தும் இசையமைந்த தமிழ்மறைப் பாடல்களாகும்.

[இசையின் நோக்கம்] மனிதனிடத்தில் தெய்வச் சாந்த இயல்புகளை உண்டாக்கவல்ல தாயிருத்தலை அனுபவிக்க அறியாது, இக் காலச் சங்கீத வித்துவான்களில் பலர் தமிழ்மறை ஏழிசைக்கு முற்றும் ஒத்துவாராது என்று ஒதுக்குகின்றனர்; இவ் வொதுக்கம் இசையின் பயனை ஒதுக்குவதாகும்.

எங்கணும் இசையைப் பருகும் புலமை பெறுவதற்குரிய வழி என்னை? பல வழிகளுண்டு; அவைகளுள் சிறப்பானது ஓவியம்.

ஓவியம் ஒரு பெரிய ஆசிரியன். ஓவியப் பள்ளியில் பயிலப் பயில நமது பேச்சு அடங்கும்; ஓவிய இசை கேட்கும். ஓவியம் நம்மை ஊமையாக்கி மௌன நிலை அருளவல்லது என்பது அனுபவத்தினல் உணர்வதொன்று.

ஓவிய உணர்வு பெருகப் பெருக இசைப் புலமையும் உடனுடன் பெருகிக் கொண்டே போகும். நாளடைவில் ஓவியம் இசையைப் பொழிதல் புலனுகும். ஓவிய இசை ஒழுக்கை அருகரின் அருள் ஓவியத்தாலும், புத்தரின் அற ஓவியத்தாலும், கண்ணனின் குழல் ஓவியத்தாலும், கிறித்துவின் சிலுவை ஓவியத்தாலும், தட்சணு மூர்த்தியின் மோன ஓவியத்தாலும் தெளியலாம்.

ஓவிய உணர்வுபெற்ற இசை ஞானியர்க்கும், அவ்வுணர்வு பெருத இசைஞர்க்கும் வேற்றுமை உண்டு. முன்னவர் உடையின்றி நிர்வாணமாய் ஆடினும், பாடினும் மனிதர் உள்ளத்தில் தீய எண்ணம் எழாது; அமைதி இன்பமே நல்கும். பின்னவர் நல்லாடை புனைந்து ஒப்பனை செய்து ஆடினும், பாடினும் தீய எண்ணமே உதிக்கும்; அமைதி தலை காட்டவும் அஞ்சும்.

இசைப்பாட்டு இயற்கையில் எதற்கு அமைந்தது? புலன்களின் புறத்தளவில் நின்று பொன்றுதற்கா அது அமைந்தது? அன்று, புலன்களின் வழியே புகுந்து கோளுக்குரிய புறமனத்தை வீழ்த்திக் குணத்துக்குரிய அகக் கண்ணைத் திறந்து அமைதி இன்பத்தை நிலை பெறுத்துதற்கென்றே இசைப்பாட்டு இயற்கையில் அமைந்தது. இதுவே இசைப் பாட்டின்—தமிழிசைப் பாட்டின் உள்ளக்கிடக்கை. இதற்கு மாறுபட்டது இசைப்பாட்டாகாது.

ஆதலால், இசைக்கலையை சான்ருேர்களின் தெய்வத் தமிழ்ப் பாடல்களில் செவ்வனே படிவித்துப் பரவச் செய்தால், மனிதனது குரங்கியல்பு மாய்ந்து அவன்பால் தெய்வச் சாந்த இயல்பு அரும்பும். இது இசைவல்லுநரின் பெருங் கடமையாகும்.

---

# குருகுலத்தில் - - - - நாள் வழிபாடு

'குமுத வல்லி'

குருகுலத்தில் மார்கழி மாதத்திலிருந்து கூட்டு வழிபாடு நடக்கிறது; தொடர்ந்து நடந்து வரும்.

குருகுலத்தில் தங்கியுள்ள நாங்கள் எல்லாரும் விடியற் காலையில் 5-மணிக்கு எழுந்திருந்து நீராடுவோம். 6-மணிக்கு வழிபாடு நடக்கும். மாலையிலும் 6-மணிக்கு வழிபாடு நடக்கும்.

ஆசிரியர் குருகுலத்தில் இருக்குங் காலத்தில், திருவாசகத்தில் "நமசிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க" என்று தொடங்கும் சிவபுராணத்தை மனம் உருகுமாறு ஓதுவார். அனைவரும் உடன் ஓதுவோம்.

காலையில் வழிபாடு முடிந்த பின், திருவள்ளுவர் திருமுன்னிலையில் ஆசிரியர், ஒரு நாளைக்கு ஒரு குறளாகத் திருக்குறள் எடுத்து, விளக்கம் சொல்லுவார். அவர் சொல்லும் பொழுது, வாழ்க்கைக்கு வேண்டிய பல கருத்துக்கள், சிந்தனைக்கும் அன்றாட நடக்கைக்கும் உதவும்படி கிடைக்கும்.

அன்று . . கத் திருக்குறளைக் கருத்துரையுட . ன் கரும்பலகையில் எங்கள் . . ஒருவர் எழுதி, முற்றத்தில் பாதையோரத்தில் பலரும் படித்துப் பயனடையும்படி வைப்போம்.

பகற்காலங்களில், அவரவர்க்குரிய பாடசாலை, தொழிற்சாலை, உண்டிச்சாலை, பயிர்ப்பண்ணை, அச்சுச்சாலை, இதழ்ப்பதிப்பு, நூலாராய்ச்சி, அஞ்சல்அனுப்பு, கணக்குவைப்பு, தோட்டவேலை, கட்டிடப் பார்வை, கால்நடைக் காப்பு முதலிய பல குருகுலப் பணிகளில் கருத்திருத்துவர்.

மாலை வழிபாடு முடிந்ததும், ஆசிரியர், சான்ருேர் பொன்மொழிகள் பற்றி ஒரு மணி நேரம் வகுப்பு முறையில் பாடம் நடத்துவார்.

ஆசிரியர் குருகுலத்தில் இல்லாத காலங்களில், ஆசிரியர் இருப்பதாகவே பாவித்து, நாங்கள் மட்டும் அவர் இருக்கையின் முன் கூட்டாக அமர்ந்து வழிபாடு செய்வோம்.

வழிபாட்டு அறையை அடையும் பொழுது எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் மனம் நல்ல தூய்மையை அடையும்.

எங்களுக்கு இம் முறைகள் ஒருதனி இன்பம் தருகிறது.

குருகுலம் வாழ்க! மன்பதை வாழ்க!

---

# சிலப்பதிகாரம்

## 15, வழிச் செல்வு.

'முத்துசாமி'

காட்டு வழி—

சிலப்பதிகாரத்தில் முதற் காண்டமாகிய புகார்க் காண்டத்தை இதுகாறும் பார்த்தோம். இனி இரண்டாம் காண்டமாகிய மதுரைக் காண்டத்தைக் காண்போம்.

உறையூரை யடைந்த கோவலன் கண்ணகி கவுந்தியடிகள் ஆகிய மூவரும் நிக்கந்தன் பள்ளிக்குச் சென்று அருகனை வணங்கினர். கவுந்தியடிகள் அருகனை வணங்கி ஆங்குள்ள முனிவர்களுக்கு, முன்னர் சாரணர் கூறியவற்றை விளங்கக் கூறினர். அன்று அவ்வூரில் தங்கி மறுநாள் வைகறை யாமத்திற் புறப்பட்டுத் தென்திசை நோக்கிச் சென்று ஒரு சோலையிற் புகுந்தனர். ஆங்கு ஒரு மறையவன் பாண்டிய மன்னன் புகழைப் பாடிக்கொண்டு அமர்ந்திருந்தனன். அவன் பாடிய பகுதியில் பின்வரும் அடிகள் வரலாற்று விருப்பமுடையோர் கருத்திருத்த வேண்டிய பகுதியாகும்.

"வடிவே லெறிந்த வான்பகை பொரு
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமையமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவன் வாழி"

ஒரு பாண்டிய மன்னன், இந்திரன் ஏவலால் மதுரையை யழிக்கவென் றெழுந்து வந்த கடலை வேலெறிந்து சுவறப் பண்ணி யடக்கினன். அப் பகையினைப் பொருது கடல் பொங்கியெழுந்து இப்பொழுதுள்ள குமரி முனைக்குத் தெற்கேயுள்ள பெரிய நிலப்பரப்பு முழுதையும் உட்கொண்டது. அப் பெரு நிலப் பகுதியில் குமரிமலை குமரியாறு பஃறுளியாறு இவ்விரண்டு யாற்றுக்கு மிடையேயுள்ள வளமான நிலப்பரப்பு எல்லாம் இருந்தன. அவை யாவையும் கடல் கோளால் ஆழ்ந்தன. அங்ஙனம் ஆழ்த்தியவதனால் அக் கடலை ஆசிரியர் "கொடுங்கடல்" என்றனர். ஆழ்ந்த பெரு நிலப் பாகத்திற்கு ஈடாக வடக்கே நீரிலிருந்து இமய மலையும் அதனை உள்ளிட்ட பெரு நிலப்பரப்பும் எழுந்தன. நாட்டின் பெரும் பாகத்தை இழந்த மக்கள் புதிதாக எழுந்த நிலப் பரப்பில் பரவினர். அவ்வாறு வடக்கே சென்று பாவி வாழ்ந்ததனை "வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு" என்றனர்.

இமய மலையும் அதனையுள்ளிட்ட நிலப்பகுதியும் நீரினின்று எழுவதற்கு முன் தமிழ் நாட்டின் வட எல்லை திருவேங்கட மலையாயிருந்தது. அதன் பின்னர் வடக்கே இமயம் வரையும் சென்று வாழ்ந்தவதனால் தமிழ் நாட்டின் வடஎல்லை இமயமாக விளங்கியது. நெடுங்காலம் இமயமலையே வட எல்லையாக இருந்தது பின்னர் ஆரியர் முதலிய வேற்று நாட்டவர் வரவு நேர தமிழக எல்லை வரவரச் சுருங்கி மறுபடியும் திருவேங்கட மலையாயிற்று. [தமிழக எல்லையைப் பற்றிய மேற்போந்த கருத்துக்களை ஆசிரியர் இளவழகனார் குருகுலத் தமிழ்க்கல்லூரியில் வரலாற்றுப் பாடம் நடத்துகையில் அறிவுறுத்தினர். அக் கருத்துக்களை மேற்காட்டிய சிலப்பதிகார அடிகளும் வலியுறுத்தும்.]

தென்னவனை வாழ்த்தியிருந்த அம் மறையவனை யணுகிக் கோவலன் "யாது நும்மூர்? இவ்விடத்து வந்த காரணம் என்னை?" என்று கேட்க, அம் மறையவன் திருவரங்கத்தில் 'திருமவர் மார்பன் கிடந்த வண்ணமும்', திருவேங்கடத்தில் 'செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்' காணும் பொருட்டு வந்தேன்; குடமலை நாட்டில் மாங்காட்டில் உள்ளேன்" என்றனன்.

பாண்டிய நாட்டு வழியாய் வந்தவனாதலின் அம்மறையவனிடம் வழி யாதெனக் கோவலன் கேட்டனன்.

அம் மறையவன், "நீங்கள் இந்தக் காட்டு வழியைக் கடந்து கொடும்பாளூர்க் குளக்கரையை யடைந்தால் சிவ பெருமானது திரிசூலததைப் போல மூன்று நெறி பிரிந்து செல்லும். அம் மூன்று வழிகளில் வலப்பக்

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

கத்து வழியாகச் சென்றால் தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும். அம்மலையை வலத் திட்டுச் செல்லவேண்டும். இடப் பக்கத்து நெறியிற் சென்றால் திருமால் குன்றத்தை யடைவீர். (திருமால் குன்றம் என்பது இப் பொழுது திருமாலிருஞ் சோலை யென்றும் அழகர் கோவில் என் றும் வழங்கப் பெறும்) ஆங்கு மயக்கத்தினை யறுக்கும் பில மொன்றுண்டு. அதன்கண் மூன்று பொய்கைகள் உள. அவற்றில் படிவீராயின் ஐந்திர நூலும், பழம் பிறப் புணர்ச்சியும், இட்ட சித்தியும் பெறுவீர்." என்று கூறி அப்பிலத்தின் வியத் தகு செயல்களையும் விரித்துக் கூறினன்.

மேலும் அவன், "அவ்விரண்டு வழிகளையும் விட்டு இடைவழி யாகச் சென்றால் அது செந் நெறியாகும். அந்நெறியில் ஊர்கள் பல கொண்ட காட்டின் வழியாகச் செல்ல வேண்டும். செல்லும்போது ஒரு தெய்வம் தோன்றி இடுக்கண் செய்யாமல் மயக்குதலைச் செய்யும். அதனைக் கடந்து சென்றால் மதுரைக் குச் செல்லும் பெருவழி யுளது," என்றனன்.

மதுரைக்குச் செல்லும் வழி யில் நிகழ்வனவற்றை மறைய வன் கூற்றானறியும் போது அக் காலத்தில் பயணம் என்பது இடுக்கண் நிரம்பியதா யிருந்த தென்று தெரிகிறது. எனினும் அம்மறையோனைப் போன்ற பெரியோர் அத்தகைய இடுக்கண் களிலும் வெற்றி பெறும் தகை மையோடு பல இடங்களுக்கும் சென்றிருக்கின்றனர் என்றும் தெரிகிறது.

அம்மறைவன் காட்டிய செவ் விய நெறியாகிய இடைவழியா கச் செல்லும்போது கவுந்தியடி களும் கண்ணகியும் வழிநடந்த களைப்போடு ஒருமருங் கிருக்கக், கோவலன் நீர் நசையால் ஒரு பொய்கைக்குச் சென்றனன் அப்பொழுது அக் கானுறை தெய்வம் மாதவியின் தோழி வயந்தமாலை யுருக்கொண்டுவந்து அவனை மயக்கிப் "பணி மொழி யாது" என்று கேட்டது. முன் னரே மறையவன் பால் மயக் குந் தெய்வம் அவ் வழியில் உண்டென்று கேட்டிருந்தானாதலால் வயந்தமாலை யுருக்கொண்டு வந்தது அக் கானுறை தெய்வமே யென்றறிந்து கொற்றவை மந் திரத்தை யுச்சரித்தனன். அதற்கு அத் தெய்வம் அஞ்சித் தன் மயக்க உருவினைக் களைந்து உண்மையைச் சொல்லி, கண்ண கிக்கும் கவுந்தியடிகட்கும் தான் நடந்து கொண்ட விதத்தைக் கூறவேண்டாமென வேண்டிக் கொண்டது. பின்னர், கோவ லன் நீருண்டு வேட்கை தீர்ந்து, தாமரை இலையில் தண்ணீர் மொண்டு சென்று கண்ணகிக் கும் கவுந்தியடிகட்கும் கொடுத்து அவர்கள் அயர்வையும் தீர்த் தனன்.

சிறு தேவதைகள் கற்புடை மகளிர்க்கும் சான்றோர்க்கும் அஞ்சும் என்பது இதனால் தெரி கிறது. கோவலனைக் காமுகன் என்பார் இந்த நிகழ்ச்சியினை எண்ணிப் பார்க்கவேண்டும். உண்மையிலேயே காமுகனாயின் அக் கானுறை தெய்வத்தின் மயக்குதலுக்கு உட்பட்டொழிந் திருப்பானன்றோ? மயங்காதது அவன் உள்ளத் தூய்மையையும் உறுதியையும் உணர்த்தும்.

பின்னர் மூவரும்; ஞாயிற் றின் வெம்மை தோன்றியதனால் மேலும் வழிச் செல்ல இயலா தென்றெண்ணி அருகிருந்த ஐயை கோட்டம் (கொற்றவை கோயில்) புக்கு ஒருபால் தங்கி யிருந்தனர். மற்றோர் பால் வேட்டுவர் தங்கள் தொல்குடிப் பிறந்த குமரியைக் கொற்றவை யாக ஒப்பனை செய்து வழிபா டாற்றினர்.

"துண்ணென் துடியொடு
தஞ்சூர் எறிதரு
கண்ணில் எயினர் இடுகடன்
உண்குவாய்
விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ
ஒருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள்
செய்குவாய்"

என்பது போன்ற துதிகளைக் கூறி பலிக்கடன் ஏற்குமாறு வேண்டிக் கொண்டனர். அப் பொழுது சாலினியென்பாள் தெய்வமுற்றுக் கோவிலின் ஒரு புறத்துக் கணவனோடிருந்த கண்ணகியை நோக்கி,

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

"இவளோ, கொங்கச் செல்வி
குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த
தவக்கொழுந்து
ஒரு மாமணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணி........"

என்று அவளுக்குப் பின் வருவனவற்றை யுட்கொண்டு கூறினள். கண்ணகி தன்னைப் புகழ்ந்தமைக்கு நாண முற்று "இம்மூதறி வுடையாள் மயங்கிக் கூறினள்" என்று புன்முறுவல் பூத்து கணவன் புறத்தே ஒடுங்கி நின்றனள்.

வேட்டுவர் வழிபாட்டின் இறுதியில் வழக்கப்படி "பொதியிற் பொருப்பன் பிறநாட்டுக் கட்சியும் காந்தையும் பழ்பட வெட்சி சூடுக விறல் வெய்யோனே" என்று வாழ்த்தினர். (பொதியிற் பொருப்பன்-பொதிய மலையை உடைய பாண்டியன்)

நஞ்சன்கூடு பல்பொடி.




யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1

# மாணவரும் தமிழ்த் தொண்டும்

(புலவர் முருகவேள்)

அன்புமிகு நண்புடையீர்! அருந்தமிழ்நன் மாணவர்கள்! 1
மன்பெரிதும் நும்மிடையே "மாணவரும் தமிழ்த்தொண்டும்"
என்பதுநற் பொருளாக யானுமொரு மாணவனாய்
நன்றுமிகப் பயின்றுவரும் நல்இயைபாற் பேசுகிற்பேன்.

மாணவர்கள் என்போர்தாம் மாண்புடையோர் எனப்படுவர் 2
பேணமிகும் குணநலத்தால், இளம்பருவப் பெற்றியினால்,
வேணபல தொண்டாற்றி மேன்மைமிக நாடுமொழி
காணவல்ல கடப்பாட்டின் காட்சியராம் காரணத்தால்.

தனியொருநல் வீட்டினுக்குத் தகஎங்ஙன் மகப்பேறின் 3
றினிதுமிக இல்லாமல் எத்துணையும் சிறவாதோ,
நனியதுபோல் நலமமையும் நாடொன்றும் சிறந்தநல்ல
துனியறுசீர் மாணவநற் றொண்டரின்றி அமையாதால்.

அருமைமிகும் இம்மனித வாழ்க்கையினில், அனைத்தெல்லாப் 4
பருவநிலை களினும் நம் மாணவநல் இளம்பருவம்
பெருமைமிக உடைத்தாகும் என்னையெனின், பெரிதுமிக
உரிமைநிலை தாழ்வதற்கும் உயர்வதற்கும் அதற்குண்டால்.

* ஒருசிலநல் இளைஞர்களை ஊங்கெனக்கே உதவுவிரேல் 5
பெரிதுமிக இவ்வுலகை மாற்றியமைப் பேன், என்றே
அறிஞரொரு வர்கூற்று ஆங்கிலத்தின் வழங்கநிற்கும்
உரைநினைந்தால் மாணவர்தம் பெருமையினை உணர்ந்துகொள்வோம்.

மல்குபெருஞ் சிறப்பின்மிகும் மாணவரே ஒருநாட்டின் 6
ஒல்கலிலாப் பெருந்தூண்கள், ஒப்பரிய செல்வங்கள்,
அல்கலிலாத் தொண்டினர்கள், ஆளுகின்ற தலைவோர்கள்,
பல்வகையில் இஃதுண்மை எனப்பலரும் பகர்வரன்றே!

ஈங்கிதுதான் நிற்க, இனி எடுத்துரைப்ப மேற்கொண்ட 7
தாந்தலைப்பின் பொருள்இரண்டுள், தமிழ்த்தொண்டென்
பதுகுறித்துப்
பாங்குபெற ஒன்றிரண்டு பகருகிற்பேன், மற்றவற்றை
நீங்கள்மிக உன்னிப்பாய் நெஞ்சிருத்திக் கேட்ககிற்பீர்!

பல்வகையில் தாம்கருதும் பலதுறையிற் பற்பலரும் 8
ஒல்வகையில் தமிழ்த்தொண்டிங் குளுற்றுவது காண்கின்றோம்;
நல்வகைய தவற்றுளெது? என்பதனை நான்இங்குச்
சொல்வனலேன், நீர்தாமே ஆராய்ந்து துணிந்துகொள்திர்!

நூல்கள்பல கற்றுணர்ந்து நுண்ணியநற் பெரும்புலமைச் 9
சால்புடையோர் செய்துவரும் தமிழ்த்தொண்டோ ஒருதிறமாம்:
எல்வகையிற் கலவைநடை இதழ்களிலே அறிவுடையார்
போல்மிகவும் எழுதுபவர் புரிவதூஉம் தமிழ்த்தொண்டாம்!

* "Give me a handful of youths, and I will set the world upside down."

"பண்டிதர்கள் நடைகடினம், பாமரர்க்குப் புரியாதால் 10
கொண்டதொரு பழம்பித்தாற் குழப்புவர்கள் இலக்கணமே
தண்டமிழ்க்கு வேண்டுவதில் சற்றும்" எனும் கொச்சைநடைக்
கண்டகர்கள் செய்வதூஉம் கருதுங்கால் தமிழ்த்தொண்டாம்!

தனித்தமிழ்என் றொருதமிழ்தான் சங்ககா லத்தெனினும் 11
இனித்தமுற வழங்கியதோ? என்றெனினும் அஃதிலதால்;
எனைத்தெனினும் வடசொல்லோ ஆங்கிலமோ எளிமைக்காப்
பிணைத்தெழுதல் வேண்டுமெனப் பேசுவரும் தமிழ்த்தொண்டர்!

புதுமைநலம் எத்துறையும் புகுந்துவரும் முறையினிற் றம் 12
மதிமைநலம் காட்டநம வண்டமிழில் திருத்தங்கள்
பொதுமைமிகும் எழுத்துச்சொற் புதுவிதிகள் புகுத்தமுயல்
எது? மெய், நலம் என்றறியா எழுத்தாளர் தமிழ்த்தொண்டர்!

அறிவியலோ அரசியலோ அரியநல்ல பொருளியலோ 13
பிறவியலோ யாதுளது? பெரிதுமிக நீர்புகழும்
செறிவில்லாத் தமிழ்மொழியில் 'ககரம்' இரண் டேயுளதென்
றறிவில்லா திகழுநரும் அருந்தமிழ்க்குப் பெருந்தொண்டர்!

கடல்கோளால் சிதல்களினால் கருத்தில்லா அசட்டையினால் 14
மிடல்கொளுநற் பகைவர்களால் வெள்ளத்தே ஆடியினில்
விடுதலினால் அழிந்தவன்றி' மிகுந்துளசில் நூல்களும் தீ
இடல்வேண்டும் எனக்கரையும் இயல்பினரும் தமிழன்பர்!

வள்ளுவர்தொல் காப்பியரை மாட்சிமிகும் இளங்கோவை 15
தெள்ளுதமிழ்ப் புலவருளே சிறந்தவரென் றுயர்த்துரைப்பர்,
எள்ளளவும் அவர்கொள்கை எற்றொழுகார்; இகலுற்றால்
பொள்ளெனவே புறம்பழிப்பார் போற்றுவதும் தமிழ்நலனே!

இவையிற்றுள் எதுசிறந்த தமிழ்த்தொண்டென் றியான்இயம்பேன் 16
சுவையற்றே ஒழியுமது சிலர்உளத்தைத் துளைத்ததுமாம்
நவையற்ற நடுநிலையில் நன்றாய்ந்து நலமுணர்ந்தே
எவையுற்ற தமிழ்த்தொண்டோ? இனிததனைச் செய்கிற்பீர்!

தாய்முலைப்பால் உணப்பெறாத் தனித்ததொரு சிறுகுழவி 17
நோய்நிலைப்பால் உற்றுமிக நொய்தாகி நலிவுறல்போல்
தாய்மொழியில் அறிவுபெறும் தகவிழந்த இளைஞர்நிலை
ஆய்நிலையில் மிகப்பெரிதும் அளியதாம் அந்தந்தோ!

அயல்மொழியிற் பெருமதிப்பும் ஆர்வமுமே கொண்டுநிற்கும் 18
மயல்மிகவும் விடுத்தொழித்து வண்டமிழிற் பெருங்காதல்
நயமுறநன் றினிதுகொள்திர்! நம்அருமைத் தாயின்நமக்(கு)
உயலுறுநல் அன்பினியர் உளர்கொல்லோ? உணருகிற்பீர்!

தூயநல்ல தனித்தமிழில் துகளறும்நல் உயர்நடையில் 19
ஆயுமுயர் இலக்கணத்தோ டழகாகப் பிழையின்றி
எயுநல்ல முறைமையினில் எழுதுதற்கும் பேசுதற்கும்
ஒயுமெல்லா வேளையினும் உவந்துமிகப் பழகுகிற்பீர்!

மறைமலைநல் அடிகளொடு மணவழகர் நாட்டாரும் 20
நிறைகலைஞர் கதிரேசர் நெடும்புகழ்நற் பாரதியார்
திறமைசெறி நடைஎழுதும் சேதுப்பிள்ளை இளவழகர்
முறைமைதிகழ் பிறபுலவோர் நூல்களெலாம் முயன்றுகற்பீர்!

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

இனி, பொருளாதாரச் செழிப்புப் பெறுதல் உலக அமைதிக்குக் காரணமான மூன்றாம் படி! இப்பொழுது, அமைதிக்காகப் படைபெருக்குதல் பெரும்பான்மை வழக்கமாயிருக்கிறது; படையும் ஓரளவு வேண்டுமாயினும், பொருள் பெருக்குதலே அதற்கு ஏற்றது. "செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் எஃகு அதனிற் கூரியது இல்" என்னும் வாழ்க்கை மறைப் பொன்மொழியை மறத்தல் பொருந்துமா? படைப் பெருக்கம் செல்வப் பெருக்கம் யாண்டும் மதிப்பைப் பெருக்கும்.

பொருட் பெருக்கமும், பயன்படும் நற்பண்டங்களை மட்டும் உழைப்பின் தொழிலால் தத்தம் நாட்டின் இயற்கை நலங்களைக் கொண்டே பெருக்குதற்குத் தன்னம்பிக்கையுடன் முயல வேண்டும். வீண்பண்டங்கள் தீய பண்டங்கள் முதலியவற்றைப் பெருக்குதல் பொருட் பெருக்கமாகாது. "திறனறிந்து தீதின்றி வந்த பொரு" ளாக இருக்கவேண்டும் என்பது திருவள்ளுவர் ஆணை! இங்ஙனம் ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள் ஏனை (அறம் இன்பம்) இரண்டும் ஒருங்கு! ஆதலின் மொழி வழி ஆட்சியின் அடிப்படையில் ஒற்றுமையும் இயற்கை யாற்றலும் பொருந்தி, அவரவரும் தத்தம் நாட்டளவில் நிலைபெறும் நேர்மை கடைப் பிடித்து, உழைப்பின் தொழில் முறைகளால் திறன் தெரிந்து தீதிலாப் பொருள் நிலை மிகுத்தல் அனைவர் அமைதிக்கும் உரிய வெற்றிப் பர்தை என்க!

---

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)